# வீஷ்ம தீபம்



இல. 74, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

# திரு. பத்மநாதன் வீஷ்மானந்தர்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வீஷ்ம தீபம்



# திரு. பத்மநாதன் வீஷ்மானந்தர்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

15-09-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


குடும்பத்தின் கலங்கரை விளக்காய்த்
திகழ்ந்து - அன்போடும், நல்ல
விழுமியங்களுடன் பாசத்தோடும்
பேணிப்பாதுகாத்து - எம்மையிங்கு
எஞ்ஞான்றும் கதறியழ வைத்துவிட்டு
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வமாம்
**அமரர் வீஷ்மானந்தன்**
திருப்பாதங்களுக்கு
**"வீஷ்ம தீபம்"**
எனும் இம்மலரிணைக்
காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அன்னையின் மடியில்
30.05.1977

ஆண்டவனின் கமலத்தில்
02.08.2006

# அமரர்
# திரு.ப.வீஷ்மானந்தர்

## திதி வெண்பா

விய ஆண்டதனில் அட்டமிவிளங்கு திதியில்
சித்த நாமயோக ஆடிப்புதன் பதினேழில்
சுவாதிமேவிய மதிய வேளைதனில் – எங்கள்
வீஷ்மன் இறை பாதாரவிந்தம் சேர்ந்தனனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வீஷ்ம தீபம்

**ஓடையிலே என் சாம்பல் கரையும்போது**
**ஒண் இசைத்தமிழே சலசலத்து ஓடவேண்டும்**

என்ற இலட்சிய இசை வேள்வியை வளர்த்து அமரதீபமாகிய வீஷ்மானந்தர் இசையுலகின் ஓர் விடிவெள்ளியாக சுடர்விட்டுப் பிரகாசித்து – தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று – என மொழிந்த பொய்யாமொழி வள்ளுவன் வாக்கினை மெய்ப்பித்து சரித்திரம் படைத்து இறையடி நல்கிய அன்னவரின் வாழ்க்கைச் சரிதத்தை பின்நோக்கிப் பார்க்கின்றோம்.

**ஜனனி ஜென்ம சௌக்கியானாம்**

**வர்த்தநீ குலசம்பதாம் - பதவி**

**பூர்வபுண்ணியானாம் - லிக்யதே**

**ஜென்ம பத்திரிகா!**

யாழ்பாடியால் பெருமை பெற்ற யாழ்ப்பாணமாம் நன்நகரில் இருமுது குரவர்களான இராமு பத்மநாதன் - கந்தையா கண்மணி (பத்மா) ஆகியோர் இயற்றிய நற்றவத்தின் பெறுபேறாக 30-05-1977 ஆம் ஆண்டு 74ஆம் இலக்கத்து மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் எனும் அஞ்சல் முகவரி கொண்ட ஆலயங்கள் சூழ்ந்த புண்ணிய மண்ணகத்தே ஆறாவது பிள்ளையாக நமது சரித்திர நாயகன் வீஷ்மானந்தர் தோற்றம் பெற்றார். செல்லப்பெயராக வீஷ்மன் எனும் நாமத்தையும் வரித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் நற்குடியில் பிறப்பெடுப்பதும், நல்விழுமியங்களைப் பெற்றிருப்பதும், நிறை ஆயுள் நிரம்பப் பெறுவதும், பூர்வ புண்ணிய பலனாக பதவி கிடைப்பதையும் அவரவர்க்கெழுதப்படும் ஜாதகம் மூலம் அறியப்படும். விண்ணக வாழ்வினை இனி நிரந்தர உறை விடமாகக் கொண்டிருக்கும் வீஷ்மானந்தர் பிறந்தகத்திற்கும், சமூ கத்துக்கும், தான் வாழ்ந்த காலப்பொழுதில் பெருமை சேர்த்திருந் தார்.

தந்தையொடு கல்வி போய்விடும், அன்னையுடன் அறுசுவை யும் அற்றுப்போம், உடன்பிறப்புடன் தோள் வலிமையும் மறைந்து விடும். வீஷ்மன் பூர்வத்து புண்ணிய பலனாக தந்தை, தாய், சகோ தரர்களினால் தனது வாழ்வினை வளமாக்கிக்கொண்டார்.

திரைகடல் ஓடித் திரவியம் தேடப் புறப்பட்ட ஆண், உடன் பிறப்புக்களான பிரான்ஸ் நாட்டில் வதியும் பிம்மானந்தர், இலண்ட னில் உறையும் சர்வானந்தர், கனடாவில் குடியிருக்கும் சிவானந்தர் என்போரையும் பெண் சகோதரிகளான பிரான்சிலுள்ள கேதீஸ்வரி மற்றும் விக்கினேஸ்வரி ஆகியோரை ஒரு தாய் வயிற்று உயிரக ளாகக் கொண்டிருந்தார்.

அன்புசால் மைத்துனர்களாக கதிர்காமநாதன், சிவராசா என் போரையும், தாயாரின் தகுதியில் வீற்றிருக்கும் அண்ணிகளான கேதீஸ்வரி, கௌசலகுமாரி, கௌசல்யா ஆகியோரை தன் நெஞ் சத்திரையில் வரித்துக் கொண்டார்.

புலம்பெயர் நாடாம் பிரான்ஸில் வதியும் ஆசை மருமக்கள் விஷ்ணுப்பிரியா, விஷ்ணுகா, பிருந்தன், யாழ்ப்பாணத்திலுள்ள மரு மக்களான பிரணவன், நிந்துஜன், மாதுசன் என்போரைத் தன் சொந்தப் பிள்ளைகளாகச் சொந்தம் கொண்டாடி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தக்கார் தகவிலர் என்பது
அவரவர் எச்சத்தால் காணப்படும்"

"இந்த நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே...? இந்த நாட்டுக்காக நீ என்ன செய்தாய்" - என்ற தாரக மந்திரத்தை உச்சிமீது கொண்டு – புகழ்பெறவேண்டி இசைத்துறையினை தன் தெய்வத்தொழிலாக மேற்கொண்டார்.

தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப் பாட சாலையிலும் இடைநிலைக் கல்வியை பின்னர் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கற்றுயர்ந்தார். விளையும் பயிரை முளையிலே தெரிவதுபோல் சிறு பராயத்தில் இசை வெள்ளத்தில் நீச்சலடிக்க ஆரம்பித்து, பள்ளி நிகழ்வுகளிலும் தெய்வ முன்றல்களிலும் தனது மேதா விலாசத்தினைப் பறைசாற்றத் தொடங்கிவிட்டார்.

நாடும், ஏடுகளும் அன்னவரின் இசை மேன்மையைப் போற் றத் தொடங்கின. பற்பல சந்தர்ப்பங்கள் தேடி ஓடி வரலாயின. சக்தி, யாழ் சேவை முதலிய ஊடகங்களில் வீஷ்மரின் இசைப் பாடல்கள் ஒலிபரப்பாயின. இலங்கை வானொலி புகழ் இராஜேஸ் வரி சண்முகம் வீஷ்மானந்தரை அரவணைத்து பாராட்டினார்.

ஐங்கரன் இசைக்குழு வீஷ்மனின் திறமைகளுக்கு வடிகால மைத்துக் கொடுத்தனர். R. P. வீஷ்மன் என தனது பெயரை அதிஷ்டகரமாக்கினார். கானல் நீராக இவரின் கனவுகள் சிதை வடையாது கைமேல் கனியாக இசைமழை பொழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று பெற்ற அன்னையும் இப்பிள்ளையைப் பெறுவதற்கு நான் என்ன தவம் செய்தேன் என்று பிதாவும் வீஷ்மனின் பெருமையினால் உளநிறைவெய்தினார்கள்.

சைவ இசைப் பாடல்களில் மட்டும் தனது முத்திரையைப் பதிப்பதுடன் நின்றுவிடாது - கிறிஸ்தவப் பாட்டுக்களிலும் இசையமைப்பதில் தன் திறமையை வெளிப்படுத்தினார். பார்த்தீபன் - கிளியின் சொண்டை மட்டும் இலக்காகக் கொண்டு அம்பெய்து தன் கருமத்தில் கண்ணாக உழைத்ததுபோல் - வீஷ்மனும் இசை அமைப்பதில் பிற இசைத்துறை வல்லாளர்களுக்கு உதாரண புருடனாக விளங்கினார்.

சக்கோட்டை பருத்தித்துறையில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்து பங்குத்தந்தையார் அருட்திரு M. பத்திநாதர் அடிகளாரின் வேண்டுதலுக்கிணங்க "அரும்பு" - எனுந் தலைப் பிலான ஒளி நாடாவினை வீஷ்மரின் அயராத பங்கேற்பில் வெளியீடு செய்யப்பட்டது.

"அவரவர் வினையின் அவரவர் வருவார்"
"நன்றுந் தீதும் பிறர்தர வாரா"

ஆம்! யோகர் சுவாமிகள் கூறியவாங்கு

"எப்பவோ முடிந்த காரியம்"

"எழுதிச் செல்லும் விதியின் கைகள் எழுதி எழுதி மேற் செல்லும், அழுதாலும், தொழுதாலும் அதில் ஓர் எழுத்தும் மாறாது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
இராஜேஸ்வரி சண்முகத்துடன் வீஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பொல்லாத பகற்பொழுது மானிட ஜென்மம் எடுத்த எவருக்குமே எஞ்ஞான்றும் வரக்கூடாது. நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்ததல்லவா இந்த உலகு.

எங்கள் பிள்ளை வீஷ்மன் இருக்கின்றான் - எமக்கு என்ன குறையுண்டு என்று பெற்றோர் கனவு கண்டுகொண்டிருக்க, எமது அன்புச் சகோதரம் மலைபோல் இருந்து எமையெல்லாம் தாங்கு வான் என சகோதரர்கள் நம்பியிருக்க - கலங்கரை விளக்காக வீஷ்மன் இருக்கிறானென மைத்துனர், மைத்துனிகள் ஏற்றிப்போற்ற - தாய்க்குத்தாயாக, பிதாவுக்குச் சரிநிகர் சமானமாக எங்கள் ஆசை மாமா கண்மணிபோல் இருப்பார் என மருமக்கள் வாழ்த்து ரைக்க, இசையரசி சரஸ்வதி என் புகழ்பாட ஒரு பக்தமுத்து பாரி னிலே நடமாடி வருகின்றார் என சிந்தை நிறைந்திருக்க, உற்றார், உறவினர் வீஷ்மனால் பெருமையையடைந்திருக்கும்வேளையில் -

"குடம்பை தனித்தொழிய புள்பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

என வள்ளுவன் கூற்று உலக நிலையாமையை எடுத்துக்காட்ட, கொல்லுங் கூற்றுவனும் ஒரு கணம் கண்ணீர் சிந்த 02-08-2006 தினத்தன்று அங்கமெல்லாம் வாயாக அனைத்து நெஞ் சங்களும் கதறியழ இசையுலகு எமக்களித்த பெருஞ்சொத்தாம் வீஷ்மானந்தன் அகாலமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

நெஞ்சங்களே அமைதி கொள்ளுங்கள்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

வாடியுதிரும் மலர்கள் மண்ணுக்கு உரமாவது உறுதி.
இசையால் வசப்படுத்திய வீஷ்மர் இறக்கவில்லை!
இசையுடன் கலந்து ஐம்பூதங்களில் சங்கமமாகி,
எஞ்ஞான்றும் ஒலித்துக்கொண்டேயிருப்பான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயின் குமுறல்

எல்லாம் நீயென்று பொத்திப் பொத்தி வளர்த்த என் செல்வமே! நான் இன்று கத்திக் கத்தி அழும்நிலை பாராயோ செல்வமே! நான் உனக்கு வெகு சீக்கிரத்தில் ஓர் அஞ்சலி வரைவேன் என்று கனவில்கூட நினைக்கவில்லையே? காலை உணவு அருந்திச் சென்ற செல்வமே! மதியம் வருவாய் என்று காத்திருந்தேன். உன் வரவைக்காணாமல் தொலைபேசியை எடுத்தேன். பதில் கிடைக்கவில்லையே? என யோசித்தேன். வெளியிலே ஓர் குரல் கேட்டு கதவைத் திறந்தேன். மனதைத் தேற்றுங்கள் உங்கள் மகனை யாரோ சுட்டுவிட்டார்கள் என ஓர் இடி இடித்தது. துடித்தேன், துவண்டேன். என் வயிறு பற்றி எரியுதடா, என் கால்கள் பதறின. வேதனையில் கதறிக் கதறி அழுதேன். கூட இருந்து குழி பறித்தார்களடா துரோகிகள். என்மனம் தாங்கமுடியாமல் உன்னைத்தேடித் தவிக்கின்றேன். எங்கே சென்றாய் என் செல்வமே. உன் நினைவால் நெஞ்சமே! புண்ணாகித் துடியாய் துடிக்கின்றேன்.

என்றும் உன் நினைவகலா
**அம்மா**

## தந்தையின் புலம்பல்

கண்ணே வீஷ்மா! நான் பெற்ற செல்வமே. காலை விழித்ததும் உன் முகம் கண்டே காரியம் ஆற்றுவேன். உறங்குமுன் உன்முகம் கண்டே உறங்குவேன். நீ இறந்த செய்தி கேட்டு ஓடி வந்து பார்க்கும்போது உன் உடலைக்கண்டு பதறினேனடா. இரக்கமில்லா கொடியவன் உன் உயிரைப் பறித்தானே. ஐயா உன் வதனம் எப்போ காண்பேன். இரக்கமே உருவான நீ எவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர் கண்டும் பொறுக்கமாட்டாயே. எல்லோருக்கும் உதவும் பண்பாளனாய் நீ இருந்தும், கோபமே அறியாத உனக்கு இப்படி ஒரு கதியா? சாதி பேதம் பாராமல் எல்லோருடனும் அன்பாய் பழகுவாயே. உன் உடன்பிறப்புகளுக்கும், சொந்தங்களுக்கும் எப்படி ஆறுதல் சொல்வேன். உன் நண்பர்களுக்கு எப்படி ஆறுதல் சொல்வேன்? நாங்கள் செய்த பாவமோ என்னவோ நீ எம்முடன் வாழ படைத்தவன் விடவில்லை. நான் இறக்கும்வரை உன் நினைவாகவே இருப்பேன். பிறவிகள் தோறும் நீ எனது பிள்ளையாக வருவாய்.

**உன் நினைவால் வாடும்**
**அப்பா**

## சகோதரர்களின் புலம்பல்

அறுவருள் இளையோனாய் எம் அன்புச் சகோதரனாய்
பாரினிலே நீ பிறந்து எம்மைப் பரிதவிக்கவிட்டு - எங்கு
சென்றுவிட்டாய்? ஆறவில்லை எம்மனம் ஆயிரம்
உறவுகள் வந்தபோதும் கண்டிப்பிற்கும் அன்பிற்கும்
உன்போல் ஓர் உறவு தேடினும் கிடைக்கவே கிடைக்காது.
மறுபிறப்பிலும் எங்களின் சகோதரனாய்
எங்களோடு பிறந்துவிடு எம் அனைவரின் நெஞ்சங்களிலும்
தெய்வமாய் பூசிக்கப்படும் எங்கள் சகோதரனே வானுலகிலிருந்து
எங்களுக்கு வழிகாட்டு.

எங்கள் நினைவில் என்ஞான்றும் வீற்றிருப்பாய்

**பிம்மானந்தன் (பிரான்ஸ்)**
**சர்வானந்தர் (லண்டன்)**
**சிவானந்தர் (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த சகோதரியின் இதயக் குமுறல்

வீஷ்மாக்குட்டி!
நான் உன்னைப் பார்க்க வேண்டும்
நான் உன்னோடு பேச வேண்டும்
ஏதேதோ கதைகள் சொன்னாயே
அதை உன்முகம் பார்த்துக் கேட்கவேண்டும்
நீ வேண்டும் எனக்கு என் உயிரே!
என் உயிர் நீ தூரத்தில் இருந்தாய்...
என் உயிரே நான் விரைந்தோடி வரநினைத்தேன்
ஆனால்... வெகுதொலைவில் நீ சென்றுவிட்டாய்.
வீஷ்மா நீ வேண்டும் எனக்கு
நான் உன்னுடன் பேசவேண்டும்
என்னுள்ளே இருக்கின்றாய் பேசிக்கொண்டே இருக்கின்றேன்
என் காதிலே உன் குரல் அக்கா அக்கா என்று
ரீங்காரமிட்டுக்கொண்டே இருக்கின்றது.
கதை சொல்லிக்கொண்டு இருக்கின்றாய்.
ஆனால் நான் உன் முகம் பார்த்து பேசவேண்டும்.
நீ வேண்டும் எனக்கு என் உயிரே!

## இளைய சகோதரியின் குமுறல்

அக்காவும் தம்பியுமாய் நாம் வளர்ந்தபோதும் நாங்கள் எந்நாளும் பிரிந்ததில்லை. இரத்தபாசம் தொடர்ந்து நின்றோம். செல்வமே இன்று நீ என்னைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டாய். ஐயா வீஷ்மா உன் பிரிவை நான் தாங்குவேனோ? தேடியும் கிடைத்திடாத இசை வித்தகனாய் நீ கிடைத்தாய். என் பிள்ளைகட்கு நல்ல வழிகாட்டியாய் நீ இருந்தாய். கண்ணை இமை காப்பது போல் என் குஞ்சுகளை காத்துவந்தாய். என் பிள்ளைகளுக்கு நல்ல தாய்மாமன் கிடைத்தான் என்று வாஞ்சையுடன் நான் இருந்தேன். இது பொறுக்காமல் நெஞ்சில் பாசமற்ற கொடியவன் பறித்தானே உன் உயிரை. ஐயோ நினைக்கையிலே நெஞ்சம் பதறுதையா உனைப்பிரிந்து இத்தரணியிலே நாங்கள் இனி எப்படி வாழ்வோம்?

என்றும் உன் நினைவுடன்
***வாழும் உன் அக்கா***
**விஜி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“அரும்புகள்” ஒலி நாடா வெளியீட்டின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார் மனமுருகல்

அன்பினால் அணைத்திடும் ஆரமுதே!
பண்பதே பாசம் என்று வாழ்ந்து காட்டி
பார்வையில் கனிவையுங் காட்டிய பண்பான மைத்துனரே!
நற்றமிழ் பேசி நயவுரைகள் கூறிடுவீர்.
ஆசை வார்த்தை கேட்டிடவே வாடுகின்றோம் மைத்துனரே.
தொலைபேசியைப் பார்க்கின்றோம் துடிக்குதே எம்மனது.
தொலைபேசியும் தொனிக்கவில்லை - உங்கள்
கம்பீரக் குரலும் கேட்கவில்லை.
தொலைதூரம் போகாதீர் தொலைபேசி அழைத்திடுவீர்
துவளும் எங்களுக்கு தூய ஒளி காட்டிடுவீர்.

## மருமக்களின் பிஞ்சு உள்ளங்களிலிருந்து...

மாமா என்று பெருமையுடன் அழைத்தோம்!
மனக்கவலை இல்லாமல் வாழ்ந்தோம். இன்று நாம் மாமா மாமா என்றழைக்க உங்கள் நிழலைக்கூட காணவில்லையே மாமா. மருமக்கள் நாம் கதறுகிறோம். ஒருமுறை உங்கள் வதனம் காண ஏங்குகின்றோம். மாமா உங்களைப் பிரிந்து நாம் வாழ்வோமா? உங்கள் உள்ளத்தைக் கேளுங்கள் சொல்லும் அது. உங்கள் பாசத்தை ஓரிரு வரிகளில் சொல்லிவிட முடியாது மாமா. கோடான கோடி வார்த்தைகள் வேண்டுமே மாமா. நாம் சுவாசிக்கும் மூச்சும் நீங்கள்தான். மாமா மாமா எங்கள் ஆசை மாமா என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும் ஆசை மருமக் கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகளின் வேதனை

மாமா ஏன் ஏமாற்றினீர்கள். என் பிஞ்சுப்பாதம் சூடுதாங்க உங்களால் முடியவில்லை. அந்த மென்மையான உயிரை கயவன் சுட்டுக்கொல்ல நாம் எல்லோரும் விட்டுவிட்டோமே மாமா. ஆனால் நீங்கள் வேண்டும் எங்களுக்கு.

## நெஞ்சம் நிறை வீஷ்மா

மூன்று வயதிலே முதிராத மொட்டாய் உன்னைப் பார்த்து ஈர்பத்து ஆண்டுகள் தாண்டி வந்தேன். முல்லை மரம் ஒன்று பூத்துக்குலுங்கியது என் வீட்டு முற்றத்தில். இது யார் வீஷ்மனா? நீதானா? வீஷ்மா என்னடா உன் கம்பீரம், உன் அழகு, உன் குழந்தைச் சிரிப்பு மட்டும் மாறவில்லை. என் கண்ணும் உன்னில் பட்டதோ நான் அறியேன்.

ஆண்டவனுக்கும் உன்மேல் பொறாமையாடா. அவனைவிட நீ அழகு என்று பாதியிலே பறித்துவிட்டான் படுபாவி. பத்தே நாட்கள் உன்னோடு இருந்தது பத்தே நாட்கள் தானே. இருபது வருடங்களையும் நிறைத்துவிட்டாய். அப்படி என்னதான் மாயம் வைத்திருந்தாயோ? மாயமாய் போகத்தானா இத்தனை மாயம் செய்தாய்? உன் சிங்கார முகத்தில் சிரிப்பைத்தானே பார்த்தேன். கோபத்தைக்கூட கண்டதில்லையடா. உன் முத்துச் சிரிப்பால் எல்லாவற்றிலும் முந்திவிடுவாயே, யாரடா அவன்? எந்தக் கொடியவன் உன்னோடு கோபித்தான்? கோபித்தவன் செய்யும் ஈனச் செயல் இதுதானா? இடிபோல் வந்தது உன் செய்தி. கனவென்று நினைத்தேன். திரும்பவும் தொலைபேசியில் அதே இடி. இடிந்து போனேனடா? வாய்விட்டுக் கதறவைத்துவிட்டாய். உன் இழப்பை ஈடுசெய்ய இன்னொன்றை எங்கு தேடுவேன். வீஷ்மா! நீ எனக்கு மச்சானா அல்லது மகனா? எனக்குத் தெரியவில்லை. தாளாமல் தவிக்கின்றேன். எல்லோரையும் உறையவைத்துவிட்டு நீ மட்டும் உறங்குகின்றாயா?

உன் ஆத்மா என்றும் எங்களுடன் இருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

மைத்துனர்
**சந்திரன்**
(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் நிறை மைத்துனரே!

இருக்கும் பொழுதல்ல. அன்புக்குரியவர்களைப் பிரிகின்றபோது தான் இழப்பின் துயரம் தாங்கமுடியாத சோகத்தை ஏற்படுத்தி விடும். ஆல விருட்சம்போல எம்மையெல்லாம் தாங்கி, துயர் துடைப்பீர் என்று எத்தனை கனவுகளைக் கண்டிருப்போம். எங்கள் நினைவுகளைக் கானல் நீராக்கிவிட்டு இவ்வளவு சீக்கிரம் இறைபதம் சேர்ந்து விடுவீரென நாங்கள் நினைத்திருப்போமா?

"இந்த மெய் சுத்தப்பொய்"

என்ற சைவசித்தாந்த தத்துவார்த்த விதிவரைந்த கோட்டினை யார்தான் கடக்கமுடியும். கண்ணீர் சொரியும் ஈரவிழிகளுடன் உமது நினைவை என்றென்றும் மனம் எனும் திரையில் கொண்டிருப்பேன். வீஷ்மா வீஷ்மா என்று உன் நாமத்தை என் இதயம் என்றும் ஒலித்தவண்ணம் இருக்கும்.

உன் நினைவகலா
**மைத்துனர்**
***ராசண்ணா***

## தம்பியின் புலம்பல்

அண்ணா! அண்ணா என்று ஆசையாய் உனைத்தானே கூப்பிட்டேன் வீஷ்மன் அண்ணா. இனி எந்நாளில் வீஷ்மன் அண்ணா உன்னை எங்கு நான் காண்பேன்? பக்கத்தில் இருந்து நீங்கள் எனக்கு அறிவுரை சொல்லித் தருவீர்களே! இன்று பரிதவிக்க எம்மை விட்டு பறந்து சென்றீர்களே! அன்புடன் தம்பி என்று ஆசையுடன் கூப்பிடுவீர்கள் என இன்று வெம்பி வெம்பி அழ என்னை வேதனையில் தவிக்க விட்டீர்களே வீஷ்மன் அண்ணா!

விரக்தியின் விளிம்பில்

**உன் தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரக்தியின் விளிம்பில்

பூப்பூத்தால் அது உதிர்ந்தாக வேண்டும்
விடியலும் இன்றே இருண்டாக வேண்டும்
நிலவும் ஒருநாள் தேய்ந்தாக வேண்டும்
பிறப்பும் ஒருநாள் இறப்பாக வேண்டும்
அது உலக நியதி.

மொட்டுக்கள் கருகுவது நியதியில்லை
விடியலும் திடுமென இருள்வதில்லை
நிலவும் ஒரே இரவில் தேய்வதில்லை
நியதிகள் முரண்பட்டது உன் வாழ்வில் ஏனோ

வாழத் தெரியாதவன் என்றனர் சிலர்
வாழ்ந்து காட்டுகிறேன் என்றாய் நீ
அன்று வயிறு குலுங்கச் சிரித்து
அதையும் பார்க்கலாம் என்றான் காலன்.

கை தடுமாறுவதற்கும் சற்றே கிறுக்கிப் பார்ப்பதற்கும்
பிரம்மனுக்கு உமது தலையெழுத்தா கிடைத்தது?
படைத்த உயிர்களைக் காப்பாற்றத் தெரியாத பிரம்மனுக்கு
முதலில் காலனவன் வீசட்டும் பாசக்கயிறு.

மணமுடித்துக் காரிகையின் கைப்பிடிப்பேன் என்றாய்
சுற்றம் சூழ்ந்து வாழ்த்த நின்றிருப்பேன் என்றாய் - நல்லதொரு
தனயனாய் தந்தையாய் வாழ கனா கண்டிருந்தாய்
கடைசியில் யாரை அரவணைக்க விண்ணுலகம் சென்றாயோ?

உன் பிரிவை மறுக்கும்
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐங்கரன் முகைக்குழு உரிமையாளரும் இசை அமைப்பாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத்துறை கலைஞருக்கு ஒரு வழிகாட்டி

அமரர் திரு பத்மநாதன் வீஷ்மானந்தர் யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியில் சாதாரண தர மாணவனாக இருந்த காலத்தில் தன்னை பாடசாலை நிகழ்வுகளில் ஒரு பாடகனாக வெளிப் படுத்தினான். பாடசாலை வாழ்வை முடித்து 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிட்ட சில கலைஞர்களுடன் சிறு நிகழ்வு களை செய்து வந்தார். 1993ஆம் ஆண்டு இசைக்குழவை ஓர் நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக ஐந்து வாத்தியக் கலைஞர்களையும், ஐந்து பாடகர்களையும் கட்டியமைத்தார். இதற்கு பெயர் சூட்டவேண்டும் என்று முடிவெடுத்தார்.

யாழ்.புகையிரத நிலைய வீதியில் உள்ள பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி நிகழ்வு நடத்தச் சென்றபோது யாழ். ஐங்கரன் இசைக்குழு என்ற பெயரைச் சூட்டி நிகழ்வை ஆரம்பித்தார். 1992-1996 ஆம் ஆண்டுவரை அவர் ஒரு "கொங்கோட் ட்றம்ஸ்" வாத்தியக் கலைஞராகவும், பாடகராகவும் இருந்தார்.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் பல நிகழ்வுகளை நடத்திவிட்டு - 1998 ஆம் ஆண்டு யாழ்.நகர் வந்ததும் பல இசைக்குழுவின் நிகழ்வுகளை சென்று பார்த்து ரசித்து வந்தார். தனது இசைக் கலைஞர்கள் இடம்பெயர்ந்து திக்குத் திக்காகச் சென்றதும் மீண்டும் இசைக்குழுவை புதிய பரிமாணத்துடன் உரு வாக்க வேண்டும் என்ற ஆவலுடன் ஓகன் வாத்தியத்தை திரு. ரஜீந்திரன் என்பவரிடம் 3 மாதங்களாகக் கற்றுக்கொண்டு அதன் பின் தானே ஒரு பிரதான ஓகன் வாத்தியக் கலைஞனாக இருந்து குழுவை வழிநடத்தினார். இதற்காக புதிய கலைஞர்களை அறி முகம் செய்யவேண்டிநேரிட்டது. இசைக்குழுவுக்கெல்லாம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியாக இருக்கவேண்டும். இங்குள்ள இசைக்குழுக்களில் அறிமுக மானவர்களை மட்டும்தான் வைத்து நிகழ்வுகள் செய்கி றார்கள். அப்படியானால் புதியவர்களையும், அவர்களின் திறமை களையும் வெளிக்கொணர முடியாது. ஆகவே புதியவர்களைக் கொண்டு என்னால் இசைக்குழுவை வளர்க்கமுடியும் என்ற நம் பிக்கையில் - புதியவர்களை உருவாக்கி, பயிற்சி அளித்து ஏனைய இசைக்குழுக்கள் யாவும் மூக்கில் கைவைக்கும் நிலைக்கு முன் னேறினார்.

அதுமட்டுமல்ல, யாழ்.கலைஞர்கள் எவரும் எதிர்பாராத வகையில் அனுபவம் குறைந்த பாடகர்களையும், கலைஞர்களு டனும் மிகப்பலம் வாய்ந்த தலைநகர் சித்தாரா இசைக்குழுவுடன் போட்டியாக துணிந்து நின்று சிறந்த முறையில் நிகழ்வை நடத் திக் காட்டியவர். எடுத்த காரியம் எதையும் துணிவுடன் செய்யக் கூடிய விக்கிரமாதித்தனின் அடுத்த பிறப்பாகவே இவரைச் சொல்ல வேண்டும்.

யாழ். நகரில் உள்ள பழமை வாய்ந்த இசைக்குழுக்கள் யாவும் 2001 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் இசைக் கலைஞர்களும் ஒலிபெருக்கி சாதனங்களும் ஒரு மினிபஸ்ஸில் தான் தூர இடம் எல்லாம் செல்வதுண்டு. ஆனால் அதிலுள்ள ஆசனத்தில் கலைஞர்கள் ஓய்வெடுக்க முடியாது. ஒலிபெருக்கி சாதனம் தான் ஓய்வெடுக்கும். இதன் காரணமாக தான் ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்பதற்காக கலைஞர்கள் ஒரு வாகனத்திலும், ஒலிபெருக்கி சாதனம் வேறு வாகனத்திலும் இசை நிகழ்வு செய்யும் இடத்துக்கு சென்றுவர ஏற்பாடு செய்தார்.

இதன் பின்னர் யாழ்.நகரில் உள்ள சகல இசைக்குழுக் களும் "ஐங்கரன்" இசைக்குழுவைப் பின்பற்றின. அதுமட்டுமன்றி, "ஒக்ரோபாட்" வாத்தியக் கலைஞர் ஒருவர் இல்லாததால் அவ் வாத்தியத்தை திரு.K.குமணன் என்பவரிடம் ஒரு மாதமாகக் கற்று கொழும்பிலிருந்து சிறந்த பாடகர்களை வரவழைத்து தனது திறமையையும் யாழ்ப்பாணத்துக் கலைஞர்களின் திறமையையும் வெளிப் படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது திறமையையும், வழிப்படுத்தலையும் சாந்தன், சுகு மார், நிரோஜன் ஆகியோர் பாராட்டினார்கள். அவர்கள் வீஷ்ம னுடன் நிகழ்வு செய்வதென்றால் தனி விருப்பம் கொள்ளும ளவுக்கு நடந்து காட்டினார்.

தோன்றில் புகழுடன் தோன்றுக என்பதற்கு அமைய தன் னையும், தனது கலைஞர்களையும் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசெல்லவேண்டும், யாழ்ப்பாணத்துக் கலைஞர்களின் திற மையைத் தென்னிலங்கைக்குக் காட்டவேண்டி பல வானொலி, தொலைக்காட்சி நிகழ்வுகளைச் செய்து - வானொலிக் குயில் இராஜேஸ்வரி சண்முகத்தால் நல்லூரில் வைத்து கௌரவிக்கப் பட்டார்.

2006 ஆம் ஆண்டு பருத்தித்துறை சக்கோட்டை சவேரி யார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு பத்திநாதர் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய அரும்பு என்னும் கிறிஸ்தவ பாடல் இறுவட்டை இசையமைத்து வெளியிட்டு வைத்தார்.

**வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**

நண்பன்
**த. இந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்



## விநாயகர் காப்பு

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு
ஈவதொன்றெமக் கில்லையே
அதுவோ உனதின்னருள்
ஆவடுதுறை அரனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பூவார் சென்னி மன்னனெம்
புங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளை கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய்
ஆடபட் டீர்வந் தொருப்படுமின்
போவாங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடனஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணனேயா
ஒப்பிலா மாமணி கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலா யுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களப்பச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல விசை பாடப்
பொன் னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தள கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கத்திரத்தின் உறுப்பையும் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டிச்
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

# சிவபுராணம்

(சிவனது அநாதிமுறையான பழமை)

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

**கலிவெண்பா**

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி!
தேசனடி போற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்!
எண்ணிறந் தெல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்!
பொல்லா வினையேன் புகழுமாறொன் றறியேன்
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா வேதங்கள்
ஐயா, வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுக் களஞ்சியம்

01. இலங்கையின் தேசிய பிதா?

D.S.சேனநாயக்கா

02. புறட்டோ கிரகம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு?

**1930 இல்**

03. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்?

**ஆனந்த சமரக்கோன்**

04. 'சுனாமி" பேரலைகள் ஏற்பட்ட தினம்?

26-12-2004 இல்

05. கறுப்பு மலர் என அழைக்கப்படுபவர் யார்?

**நெல்சன் மண்டேலா**

06. உலகின் மிகப்பெரிய கண்டம்?

**ஆசியா**

07. தங்கத்தாத்தா என்று அழைக்கப்படுபவர் யார்?

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

08. இதயம் இயங்குவதைக் காட்டும் கருவி?

**காடியோ கிராப்**

09. இலங்கையின் தேசியப் பறவை எது?

**காட்டுக்கோழி**

10. அறுகம்புல்லின் சரியான தமிழ்ப்பதம்?

**அகரம்புல்**

11. திருக்குறள் கொண்டுள்ள பாக்கள் எத்தனை?

**1330**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இலங்கைப் பாடசாலைகளில் கட்டாயக் கல்வியின் வயதெல்லை என்ன?

5--14

13. இலங்கை சுதந்திரம் பெற்ற தினம்?

**4-2-1948**

14. வெந்நீர் ஊற்றுக்கள் இலங்கையில் காணப்படுவது?

**கன்னியாவில்**

15. தமிழ்மொழில் உள்ள நெடுங்கணக்கு?

**247**

16. தீபந்தாங்கிய சீமாட்டி என அழைக்கப்படுபவர்?

**புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார்**

17. இயேசுநாதர் உயிர் வாழ்ந்த ஆண்டுகள்?

**33**

18. உலகப்புகழ் "துஸ்ரா" வகை பந்துவீச்சாளரான இலங்கையர்?

**முத்தையா முரளிதரன்**

19. ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படும் நாடு?

**துருக்கி**

20. கடலின்கீழ் அமைந்துள்ள நாடு?

**ஒல்லாந்து**

21. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது?

**29-7-1987 இல்**

22. இலங்கையின் தேசிய விளையாட்டு?

**கரப்பந்தாட்டம்**

23. இடியேறுதாங்கி கருவியைக் கண்டுபிடித்தவர்?

**பெஞ்சமின் பிராங்ளின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. 10 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி 2006 இல் நடைபெற்ற நாடு?

**இலங்கை**

25. 2008 இல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறும் நாடு?

**தென்னாபிரிக்கா**

26. எயிட்ஸ் நோயைப் பரப்பும் கிருமி எது?

H.I.V

27. உலகின் முதலாவது பெண் பிரதமர்?

**சிறிமாவோ பண்டாரநாயக்கா**

28. முதன் முதலில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி பதக்கம் பெற்ற இலங்கைப் பெண்மணி?

**சுசந்திகா ஜெயசிங்க**

29. இலங்கை மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை அனுப்பும் நாடு?

**சீனா**

30. பர்மா நாடு தற்போது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

**மியான்மர்**

31. சமாதானத்தின் குறியீடுகள் யாவை?

**வெண்புறா, ஒலிவ் மரத்தின் இலை.**

32. உலகின் மிகப்பெரிய முத்து?

**கஜமுத்து**

33. மனிதர்களை உண்ணும் தாவரங்கள் எங்கு காணப்படுகின்றன?

**நியூகினித்தீவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. யாழ்.குடாநாட்டில் பாயும் ஆறு எது?

**வழுக்கை ஆறு.**

35. சாரணர் இயக்கத்தின் பிதா யார்?

**பேடன் பவல் பிரபு**

36. வற்றாத நீர்க்கிணறு காணப்படும் இடம் எது?

**நிலாவரை (புத்தூர்)**

37. வசன நடை கைவந்த வல்லாளர் என அழைக்கப்படுபவர்?

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**

38. கிரகத்துக்குரிய நிலைப்பாட்டை இழந்துள்ள கோள் எது?

**புளுட்டோ**

39. பாக்குநீரிணையை முதன்முதல் நீந்திக்கடந்த ஈழத்தமிழர் யார்?

**மு.நவரத்தினசாமி**

40. விஞ்ஞானியாகவும், ஜனாதிபதியாகவும் இந்தியாவில் மிளிர் பவர் யார்?

**அப்துல் கலாம்**

41. யாழ்ப்பாணம், கண்டி நகரங்களை இணைக்கும் பாதை எது?

**A – 9**

42. பசுப்பாலில் நீர் கலந்திருப்பதைக் கண்டறியும் கருவி எது?

**பாலடர்த்திமானி**

43. மனித உறுப்பில் குருதி ஓட்டமில்லாத பகுதி எது?

**கண்ணின் கருவிழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. முதன்முதலில் இதயமாற்று சத்திரசிகிச்சையை மேற்கொண்டவர்?

**கிறிஸ்ரியன் பேணாட்**

45. தாலமூலசூறண தைலம் என்று அழைக்கப்படுவது எது?

**ஓடியல் கூழ்**

46. மனித உயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் கதிர்களைத் தடுப்பது எது?

**ஓசோன் படை**

47. மிகவும் குறைந்த தேசிய கீத வரிகளை இசைக்கும் நாடு எது?

**ஜப்பான்**

48. குருதியை உற்பத்தி செய்யும் உறுப்பு எது?

**கல்லீரல்**

49. முதன்முதலில் விண்வெளிப் பயணம் செய்த நாயின் பெயர்?

**லைக்கா**

50. புகையிலையில் காணப்படும் நச்சுப்பொருள் எவ்வாறு அழைக்கப்படும்?

**நிகோட்டின்**

51. உலகில் அதிகளவு நாடுகளைக் கொண்ட கண்டமெது?

**ஆபிரிக்கா**

52. ஒரு தலைமுறை எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும்?

28

53. மனித உடலின் சாதாரண வெப்பநிலை யாது?

98.4° F



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. இலங்கையில் வாழும் விஞ்ஞான புனைகதை எழுத்தாளர் யார்?

**ஆர்தர் சி. கிளார்க்**

55. நீரிலும் நிலத்திலும் வாழும் பறவை எது?

**பென்குயின்**

56. உலக வலய மையம் எவ்வாறு சுருக்கமாகக் குறிக்கப் படும்?

W.W.W

57. கடல் நீரைப் பருகும் பறவை எது?

**டொல்பின்**

58. புவிக்கு கிட்டவுள்ள கிரகம், மிகவும் வேகமாக சுழற்சியு டைய கிரகம் யாவை?

**புதன் / வெள்ளி**

59. "கல்வியே மனிதனை உருவாக்குகின்றது" என்ற வாக்கியம் எந்த நாட்டுப் பழமொழி?

**இங்கிலாந்து**

60. இலங்கைத்தீவின் இலவசக் கல்வியின் பிதாமகன்?

C.W.W. **கன்னங்கரா**

தொகுப்பு -

**V.A.சிவராசா.,** B.A, B.Phill, Dip.in.Ed

*முன்னாள் அதிபர் (யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம், யா/ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை* **R.C.T.M.S,** *நல்லூர் ஆனந்த வித்தியாலயம்,)*


*யா/பரஞ்சோதி வித்தியாலயம் – கோண்டாவில்*

*சோதிடர் – வேலணை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



**எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு**

எமது அன்புச் செல்வம் எம்மைவிட்டுப் பிரிந்த செய்தி அறிந்து ஓடோடி
வந்து எம் துயரில் பங்குகொண்ட அயலவர்கள், உறவினர்கள்,
அன்பர்கள், நண்பர்கள், எமது செல்வத்தைச்
சுமந்து சென்ற உள்ளங்களுக்கும், தொலைபேசியில்
தொடர்புகொண்டு ஆறுதல் கூறியோருக்கும்,
பிரான்ஸில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில்
கலந்து கொண்டோருக்கும்,
துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டோருக்கும்,
அந்தியேட்டிக் கிரியைகளிலும், வீட்டுக்கிருத்தியத்திலும்,
மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பித்தோருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மேலும் வேறு எவருக்காவது
நன்றிகூறத் தவறியிருப்பின்
அதனைப் பெரிதுகொள்ளாது
இந்நன்றி அறிதலினை
ஏற்றுக்கொள்ளும்படி
வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

**74, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**

சாந்தி அச்சகம்
ஓவ்செற் பிரின்ட்
நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.
போன் : 222 2821



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org